## நேஷன்ஸ் வியாபார முதலீட்டுத் திட்டக் கணக்கு
## நியதிகளும் நிபந்தனைகளும்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. - பீ.கியு118 (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படும்) இல் திறந்து பராமரிக்கப்பட்டு வருகின்ற அனைத்து நேஷன்ஸ் வியாபார முதலீட்டுத் திட்டக் கணக்குகளும் (இதன் பின்னர் "NBIP கணக்கு" என்றழைக்கப்படும்) கட்டுப்படுத்தப்படும்:

**கணக்கைத் திறத்தல்**

1. கணக்கு ஒன்றைத் திறக்கும் போது, நேஷன்ஸ் வங்கியின் கணக்குகள் திறக்கும் விண்ணப்பப் படிவங்களை முறையாக நிரப்பிய பின்னர், வங்கியால் பின்பற்றப்படும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் செயல்முறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அடையாளம் காணும் செயற்பாடு மூலம் நேர்மறையாக அடையாளம் காணப்பட்டுள்ள, நேஷன்ஸ் NBIP கணக்குகளுக்கான தகைமையைப் பூர்த்தி செய்கின்ற, ஒரு கம்பனி அல்லது ஒரு வியாபார நிறுவனத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பதினெட்டு (18) வயதுக்கு மேற்பட்ட பங்காளிகளால் (இதன் பின்னர் "வாடிக்கையாளர்" என்று அழைக்கப்படுவார்கள்) NBIP கணக்கைத் திறக்கலாம்.

2. NBIP கணக்கைத் திறக்கும் அதே நேரத்தில் மற்றும் வாடிக்கையாளருக்கு வங்கியில் நடைமுறைக் கணக்கு ஒன்று இல்லை என்றால், வங்கியின் நடப்புக் கணக்கு ஒன்றைத் திறக்கும் செயற்பாடுகளுக்கு இணங்க வாடிக்கையாளர் வங்கியில் ஒரு நடைமுறைக் கணக்கைத் திறக்க வேண்டும் (இனி நடைமுறைக் கணக்கு எனக் குறிப்பிடப்படும்).

3. குறைந்தபட்சம் ரூ. 10,000.00 ஆரம்ப வைப்புத்தொகையுடன் அல்லது வங்கி அதன் முழுமையான விருப்புரிமைக்கு இணங்க அவ்வப்போது தீர்மானிக்கக்கூடிய வேறொரு தொகையுடன் NBIP கணக்கைத் திறக்கலாம்.

4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்க திறக்கப்படுகின்ற அனைத்து கணக்கிற்கும் ஓர் கணக்கிலக்கம் வழங்கப்படும் என்பதுடன், வங்கியுடன் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும், அனைத்து வைப்பு படிவங்களிலும் (Deposit Slips) அந்த இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். வாடிக்கையாளருக்கு முறைப்படி அறிவித்தல் கொடுத்து விட்டு மேற்படி இலக்கத்தை மாற்றுவதற்குக் வங்கிக்கு உரிமை உண்டு.

**முதிர்வு இலக்குப் பெறுமதி மற்றும் முதிர்வுத் திகதி**

5. ஒரு NBIP கணக்கை குறைந்தபட்ச முதிர்வு இலக்குப் பெறுமதியாக ரூ. 250,000 உடனும் அதிகபட்ச முதிர்வு இலக்குப் பெறுமதியாக ரூ. 5,000,000 உடனும் திறக்கலாம். "முதிர்வு இலக்குப் பெறுமதி" என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நேஷன்ஸ் வியாபார முதலீட்டுத் திட்டத்தின் கீழ் (இதன் பின்னர் “முதலீட்டுத் திட்டம்” என்றழைக்கப்படும்) முதிர்வுத் திகதியில் பெற்றுக் கொள்வதற்கு வாடிக்கையாளர் வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள தொகையாகும். "முதிர்வுத் திகதி” என்பது, வங்கியின் நியதிகள் மற்றும்

நிபந்தனைகளுக்கு உட்பட்டு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதிர்வு இலக்குப் பெறுமதி வாடிக்கையாளருக்குக் கிடைக்கின்ற திகதியாகும்.

6. குறைந்தபட்சம் இரண்டு (2) வருட மற்றும் அதிகபட்சம் ஐந்து (5) வருட காலஎல்லையில் அல்லது வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படுகின்ற மற்றும் அங்கீகரிக்கப்படுகின்ற வேறொரு காலஎல்லையில் முதிர்வு இலக்குப் பெறுமதி வாடிக்கையாளருக்குக் கிடைக்கின்ற வகையில் தேர்ந்தெடுக்கப்படலாம்.

7. NBIP கணக்கைத் திறக்கும் போது, கணக்கைத் திறக்கும் விண்ணப்பப் படிவத்தில், பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்ற முதிர்வு இலக்குப் பெறுமதியைத் தேர்ந்தெடுத்து அது கிடைக்க வேண்டிய திகதியையும் வாடிக்கையாளர் அதில் குறிப்பிட வேண்டும். அதன் படி, இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதிர்வுத் திகதியில் முதிர்வு இலக்குப் பெறுமதியைப் பெற்றுக் கொள்வதற்குத் தகைமை பெறுவதற்காக NBIP கணக்கில் வைப்புச் செய்ய வேண்டிய மாதாந்த தவணைப் பணத்தையும் அது செலுத்தப்பட வேண்டிய திகதியையும் வங்கி கணக்கிட்டு வாடிக்கையாளருக்கு அறிவிக்கும்.

**தவணைப் பணம்**

8.

அ. ஆரம்ப வைப்புத்தொகை ,முதிர்வு இலக்குப் பெறுமதி, முதலீட்டுக் காலஎல்லை மற்றும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள வட்டி விகிதம் ஆகியவற்றை கருத்தில் எடுத்துக் கொண்டு வங்கியால் மாதாந்த தவணைத் தொகை கணக்கிடப்படும். எவ்வாறிருப்பினும், மாதாந்த தவணைத் தொகை ரூ. 10,000/- க்குக் குறையாது.

ஆ. வங்கி நிச்சயித்துக் குறிப்பிட்டுள்ளவாறு உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட மாதாந்த தவணைத் தொகையை NBIP கணக்கில் வரவு வைப்பதற்கு வாடிக்கையாளர் வாக்குறுதியளித்து அவ்வாறு செய்வதற்கு இணக்கத்தையும் தெரிவிக்கின்றார். வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதிர்வு இலக்குப் பெறுமதியைப் பெறுவதற்குத் தகுதிபெற, முதிர்வுத் திகதி வரை ஒவ்வொரு மாதமும் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர், மாதாந்த தவணையை முழுமையாகச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாதமும் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதாந்தம் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் மாதாந்த தவணையை முழுமையாகச் செலுத்துவதற்கு வாடிக்கையாளர் தவறினால், முதிர்வு தேதியில் முதிர்வு இலக்குப் பெறுமதியைப் பெற , வாடிக்கையாளர் தகுதி பெற மாட்டார்.

9. கீழே உள்ள பிரிவு 10 இன் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, ரொக்கப் பணம் மற்றும் வாடிக்கையாளரின் பெயரில் வழங்கப்படும் காசோலைகள் மட்டுமே NBIP கணக்கில் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். இருப்பினும், மற்றைய வங்கிகளால் வழங்கப்படும் காசோலைகளைப் பொருத்தளவில், காசோலை பணமாக்கப்பட்டு NBIP கணக்கில் வரவு வைக்கப்பட்ட திகதியில் மட்டுமே கட்டுப்பணத் தொகை NBIP கணக்கில் வைப்புச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

10. இங்கு குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்த தவணைப் பணத்தைச் செலுத்துவதற்காக NBIP கணக்கைத் திறக்கும் சந்தர்ப்பத்தில், வாடிக்கையாளர் வங்கியில் பராமரிக்கப்படும் ஒரு வங்கிக் கணக்கிலிருந்து NBIP கணக்கிற்கு பணம் அனுப்புவதற்கான நிலையான கட்டளை ஒன்றை வழங்க வங்கியால் கோரப்படலாம்.

**வட்டி மற்றும் முதிர்வுக் கொடுப்பனவுகள்**

11. NBIP கணக்கைத் திறக்கும் போது வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் NBIP கணக்கின் நாளாந்த நிலுவைக்கான வட்டி கணக்கிடப்படும் என்பதுடன், முதிர்வு திகதி வரை மாதந்தோறும் அது NBIP கணக்கில் வரவு வைக்கப்படும். தேவை ஏற்படின் வட்டி விகிதங்களை மாற்றுவதற்கான அல்லது திருத்துவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

12. NBIP கணக்கின் காலஎல்லையில் எந்த சந்தர்ப்பத்திலேனும் NBIP கணக்கின் கீழ் வங்கி நிர்ணயித்துள்ள மாதாந்த தவணைத் தொகைக்கு அதிகமான ஒரு தொகையை அல்லது அந்தத் தவணைத் தொகையின் மடங்குகளாக மேலதிகமாக ஒரு தொகையை வைப்புச் செய்து, முதிர்வுத் திகதிக்கு முன்னர் முதிர்வு இலக்குப் பெறுமதியை அடைந்தால், வாடிக்கையாளருக்கு அறிவித்த பின்னர் நிச்சயிக்கப்பட்டுள்ள மாதாந்த தவணைப் பணத்துக்கு மேலதிகமாக செலுத்தியுள்ள தொகைக்கு குறைந்த விகிதத்தில் வட்டியைக் கணக்கிடுவதற்கும் அல்லது மேற்படி மேலதிக தொகைக்கு வட்டி செலுத்துவதை முழுமையாக இடைநிறுத்துவதற்கு வங்கிக்கு முழு உரிமையும் உண்டு.

13. முதிர்வு திகதியில், வங்கியால் வாடிக்கையாளருக்கு முதிர்வுத் திகதியில் அல்லது சட்டத்தினால் அவசியமாக்கப்படும் முதலீட்டு காலஎல்லையினுள் செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட வரிகளை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ள மேலதிக பற்று வசதியின் கீழ் அனைத்து நிலுவைத் தொகைகள் மற்றும் மற்றைய கட்டணங்களை (ஏதேனும் இருந்தால்) அவற்றைக் கழித்துக் கொண்டு, முதிர்வுத் திகதியில் இலக்குப் பெறுமதி செலுத்தப்படும். எவ்வாறிருப்பினும், வாடிக்கையாளரால் எல்லா சந்தர்ப்பங்களிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நியதி மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

14. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளவாறு கணக்கு ஆரம்பிக்கும் படிவங்களில் வாடிக்கையாளரின் வரி நிலை மற்றும் வசிக்கும் முகவரி பற்றிய சட்டப்பூர்வ ஒரு பிரகடனத்தை பூர்த்தி செய்ய வேண்டும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அவ்வாறான ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்படுகின்றவாறு வட்டிக் கொடுப்பனவுகள் மீது செலுத்த வேண்டிய வரிகளை (நிறுத்திவைக்கும் வரி மற்றும் ஏனைய நியதிச்சட்ட வரிகள் உட்பட) கழிப்பதற்கு வங்கிக்கு உரிமையுண்டு. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பின்னொரு சந்தர்ப்பத்தில் செலுத்தப்படாத வரியை வங்கியிடம் கோரும் பட்சத்தில் செலுத்தப்படாமல் இருக்கும் வரியை அறிவிப்பின்றி வாடிக்கையாளரிடமி ருந்து அறவிடும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

15. கீழே உள்ள பிரிவு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையைத் தவிர, NBIP கணக்கிலிருந்து

முதிர்வுத் தேதிக்கு முன்னர் பணத்தை எடுக்க வாடிக்கையாளர் அனுமதிக்கப்பட மாட்டார்.

**மேலதிகப்பற்று வசதி**

16. கீழே உள்ள பிரிவு 18 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க, வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்ற வட்டி விகிதத்தில் நடைமுறைக் கணக்கின் ரூ. 100,000/- குறைந்தபட்ச எல்லை வரை மற்றும் NBIP கணக்கில் நிலவுகின்ற நிலுவையின் பெறுமதியில் இருந்து 50% வரை வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மேலதிகப்பற்று வசதியை வாடிக்கையாளருக்கு வங்கி வழங்கலாம், இருப்பினும், மேலதிகப்பற்று வசதிக்கு தகுதி பெற, வாடிக்கையாளரின் NBIP கணக்கில் குறைந்தபட்சம் ரூ, 200,000.00 நிலுவையில் இருக்க வேண்டும்.

17. மேலே குறிப்பிட்டுள்ளபடி, மேலதிகப்பற்று அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறினால், முதிர்வுத் திகதிக்கு முன் எந்த நேரத்திலும் NBIP கணக்கை கலைத்துவிட வங்கிக்கு உரிமை உள்ளது.

18. மேலே குறிப்பிட்டுள்ளபடி, மேலதிகப்பற்று வசதியை வழங்குவதானது, NBIP கணக்கில் உள்ள கணக்கு நிலுவை, வாடிக்கையாளரால் தீர்த்து வைக்கப்படாத வேறொரு வங்கி வசதிக்கான பிணையாக வைத்திருக்கப்படலாகாது என்ற நிபந்தனைக்கு உட்படும்.

**முதிர்வுத் திகதி**

19.

அ. தனிப்பட்ட வாடிக்கையாளரின் மரணம் ஏற்பட்டால்
ஆ. அமுலில் உள்ள சட்டத்தின்படி தனியுரிமை, பங்குடமை வியாபாரம் அல்லது இயக்கம் / சமூகம் / சங்கம் கலைக்கப்பட்டால், அல்லது
இ. நிறுவனத்திற்குப் பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஒடுக்குதல், கலைத்தல் அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையில்(களில்) கலைத்தல்.

முதிர்வுத் திகதிக்கு முன்னர், முதலீட்டுத் திட்டம் மற்றும் மேலதிகப் பற்று வசதி முடிவுக்கு வரும் என்பதுடன், வாடிக்கையாளரின் இறப்பு அல்லது கலைப்பு இடம் பெறுகின்ற திகதியில் மேலதிகப்பற்று வசதியின் கீழ் வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டியுள்ள வரிகள் மற்றும் ஏனைய சட்டப்பூர்வ வரிகள் மற்றும் நிலுவைத் தொகைகள் மற்றும் பிற கட்டணங்கள் (ஏதேனும் இருந்தால்) அவற்றைக் கழித்துவிட்டு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ள அசல் தொகை மற்றும் ஒன்று சேர்ந்துள்ள வட்டி உட்பட NBIP கணக்கின் இருப்பு (இறுதியான செலுத்தித் தீர்க்கும் பெறுமதியின்படி) பொருந்தக்கூடிய சட்டத்தின்படி வங்கியால் செலுத்தப்படும்.

20. ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளரைப் பொறுத்தளவில், அவரால் முதிர்வுத் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மரணிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் வங்கியின் நியதி, நிபந்தைனகளின்படி, NBIP கணக்கைத் திறக்கும் போது அல்லது அதற்குப் பிறகு எந்த நேரத்திலும் நியமத்தர் படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் இறுதி தீர்வு மதிப்பு செலுத்தப்பட வேண்டிய பயனாளி(கள்)பெயரிடப்பட

வேண்டும்.

**வாடிக்கையாளரால் தவணைப்பணம் செலுத்தப்படாமையின் விளைவுகள்**

21. வாடிக்கையாளர் உரிய திகதியில் ஏதேனும் 2 தவணைப் பணத்தைச் செலுத்தத் தவறினால், வாடிக்கையாளருக்கு அறிவித்துவிட்டு எந்த நேரத்திலும் முதலீட்டுத் திட்டத்தை இடைநிறுத்த வங்கிக்கு உரிமை உள்ளது என்பதுடன், 22 மற்றும் 24 ஆம் பிரிவுகள் மற்றும் வங்கியின் பொதுவான வியாபார நிபந்தனைகளுக்கு உட்பட்டு வங்கி;

அ) NBIP கணக்கை மூடிவிட்டு, வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டியுள்ள வரிகள் மற்றும் நியதிச்சட்ட கட்டணங்கள் மற்றும் கணக்கை மூடுவதற்கான கட்டணம் ஆகியவற்றை அறவிட்டதன் பிற்பாடு அவ்வாறு மூடும் நேரம் வரை ஒன்று சேர்ந்துள்ள வட்டியுடன், முதலீடு செய்யப்பட்டுள்ள அசல் தொகையை வாடிக்கையாளருக்கு செலுத்தும்,

அல்லது

ஆ) NBIP கணக்கை மூடிவிட்டு, வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டியுள்ள வரிகள் மற்றும் நியதிச்சட்ட கட்டணங்கள் மற்றும் கணக்கை மூடுவதற்கான கட்டணம் ஆகியவற்றை அறவிட்டதன் பிற்பாடு அவ்வாறு மூடும் நேரம் வரை ஒன்று சேர்ந்துள்ள வட்டியுடன், முதலீடு செய்யப்பட்டுள்ள அசல் தொகை உட்பட NBIP கணக்கிலுள்ள நிலுவையை வாடிக்கையாளரின் பெயரில் திறக்கப்பட்டுள்ள, வியாபார நடைமுறைக் கணக்குகளைக் கட்டுப்படுத்துகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற ஒரு வியாபார நடைமுறைக் கணக்கிற்கு மாற்றும்

அல்லது

இ) NBIP கணக்கை பராமரிப்பதுடன் மற்றும் வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டியுள்ள வரிகள் மற்றும் நியதிச்சட்ட கட்டணங்கள் ஆகியவற்றை அறவிட்டதன் பிற்பாடு முதிர்வுத் திகதியில் ஒன்று சேர்ந்துள்ள வட்டியுடன் முதலீடு செய்யப்பட்டுள்ள அசல் தொகையை செலுத்துதல்

22. மேலுள்ள பிரிவு 21 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் NBIP கணக்கை மூடிவிடுதலின் போது அல்லது மேற்கூறிய பிரிவு 21 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு NBIP கணக்கை பராமரித்து வருகையில் வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மேலதிகப்பற்று வங்கியினால் முடிவுறுத்தப்படும் என்பதுடன், மேலதிகப்பற்று வசதியின் கீழ் வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகளையும், நியதிச்சட்ட வரிகள் மற்றும் நிலுவைகள் மற்றும் பிற கட்டணங்களை (ஏதேனும் இருந்தால்) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், வங்கியின் முதல் கோரிக்கையின் போது வாடிக்கையாளரால் அது செலுத்தப்பட வேண்டும்.

23. விதிவிலக்கான சூழ்நிலைகள் மற்றும் வங்கியின் முழுமையான விருப்புரிமையின் பேரில் தவிர, NBIP கணக்கை மூடுவதற்கு மற்றும்/அல்லது அதிலுள்ள நிலுவையை

முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ முதிர்வுத் தேதிக்கு முன்னர் மீளப் பெறுவதற்கு வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். முதிர்வுத் திகதிக்கு முன்னர் NBIP கணக்கை மூடுவதற்கு வாடிக்கையாளரை வங்கி அனுமதித்தால், வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மேலதிகப்பற்று வசதியின் கீழ் வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டியுள்ள வரிகள், நியதிச்சட்ட அறவீடுகள், அனைத்து நிலுவைத் தொகைகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் (ஏதேனும் இருந்தால்) மற்றும் கணக்கை மூடுவதற்கான கட்டணம் ஆகியவற்றைக் கழித்து முடிவுத்திகதி காலம் வரை ஒன்று சேர்ந்துள்ள வட்டியுடன் முதலீடு செய்யப்பட்ட அசல் தொகை வாடிக்கையாளருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

24. மேலே உள்ள பிரிவு 21 அல்லது 23ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு சூழ்நிலையில் வங்கி அல்லது வாடிக்கையாளர் ஒரு முதலீட்டுத் திட்டத்தை முடித்துவிட்டு NBIP கணக்கை மூடினால், வங்கியானது NBIP கணக்கை மூடும் போது NBIP கணக்கில் உள்ள திரண்ட மொத்த வட்டியில் 50% அபராதமாக விதிக்கும் என்பதுடன், அவ்வாறு மூடும் போது வங்கி தனது விருப்பப்படி நிர்ணயிக்கின்ற ஒப்பந்த வட்டி விகிதத்தை விட குறைவான விகிதத்தில் NBIP கணக்கில் முதலீடு செய்யப்பட்ட அசல் தொகைக்கு வட்டியை செலுத்தும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

25. வாடிக்கையாளரின் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு 2 மாதங்களுக்கு முன் எழுத்தில் அறிவிப்பை வழங்கிய பிறகு, எந்த நேரத்திலும் முதலீட்டுத் திட்டத்தை நிறுத்துவதற்கும் அதன் விருப்பப்படி எந்தவொரு NBIP கணக்கையும் மூடுவதற்கும் வங்கிக்கு உரிமை உள்ளது. இந்த பிரிவின் கீழ் NBIP கணக்கின் முதிர்வு திகதிக்கு மற்றும்/அல்லது NBIP கணக்கை முடுவதற்கு முன்னர், வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அவ்வாறு முடிவுறுத்தப்படுகின்ற திகதி வரை திரட்டப்பட்ட வட்டியுடன் முதலீடு செய்யப்பட்டுள்ள அசல் தொகை, மேலதிகப்பற்று வசதியின் கீழ் வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டிய வரி, நியதிச்சட்ட கட்டணங்கள், அனைத்து நிலுவைத் தொகைகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் (ஏதேனும் இருந்தால்) குறைக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு செலுத்தப்பட வேண்டும்.

26. வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட NBIP கணக்கின் விவரங்களைக் குறிப்பிடும் முதலீட்டு அறிவிப்பு, NBIP கணக்கைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். வாடிக்கையாளருக்கு கணக்குப் புத்தகம் வழங்கப்பட மாட்டாது.

27. வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட NBIP கணக்கின் இரு வருட கணக்கு அறிக்கைகளை வங்கி வாடிக்கையாளருக்கு வழங்கும். எவ்வாறாயினும், வாடிக்கையாளருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு அதன் விருப்பப்படி கணக்கு அறிக்கைகளை வழங்குகின்ற இடைவெளியை மாற்ற வங்கிக்கு உரிமை உண்டு.

28. கணக்குக் கூற்றானது, மேற்படி கூற்று கிடைத்திருக்க வேண்டிய திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் (அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 மற்றும் டிசம்பர் 31 ஆம் திகதி) வாடிக்கையாளருக்கு கணக்கு அறிக்கை கிடைக்காவிட்டால் அது பற்றி வங்கிக்கு அறிவிக்க வேண்டும். வங்கியிலிருந்து பெறப்படுகின்ற ஒவ்வொரு கணக்கு கூற்றையும் சரிபார்த்து, தகவல் சரியாக உள்ளிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வாடிக்கையாளர் ஒப்புக் கொள்கிறார். ஏதேனும் பிழைகள் இருந்தால், கணக்குக் கூற்று

கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 21 நாட்களுக்குள் அதுபற்றி வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

29. வாடிக்கையாளர் தனது அறிக்கையின் பிரதிகளைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். வங்கியிடமிருந்து அறிக்கைகளின் பிரதிகள் கோரப்பட்டால், வங்கியின் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு ஏற்ப இந்த சேவையை வழங்குவதற்கான கட்டணத்தை அறவிட வங்கிக்கு உரிமை உள்ளது.

30. வங்கியின் விருப்புரிமையின் படி பணம் அல்லது காசோலை வைப்புச் செய்யப்பட்டால் ஒழிய வங்கியினால் அதற்காக தனித்தனியாக தபால் மூலம் அறிவித்தல் அனுப்பப்பட மாட்டாது.

31. வாடிக்கையாளரின் அஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், வாடிக்கையாளர் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

32. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, NBIP திட்டக் கணக்கின் கீழ் வாடிக்கையாளரின் உரிமைகள் அல்லது கடமைகள் எதையும் வாடிக்கையாளர் உரிமைசாட்டவோ மாற்றவோ கூடாது என்பதுடன், அத்தகைய மாற்றங்களிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் எந்த இழப்புக்கும் வங்கி கட்டுப்படாது அல்லது பொறுப்பேற்காது.

33. இங்கு அடங்கியுள்ள எதற்கும் முரணாக இருப்பினும் அது பற்றிக் கருத்தில் கொள்ளாமல், வாடிக்கையாளரின் NBIP திட்டக் கணக்கு அல்லது வாடிக்கையாளரின் வங்கிக்கான எந்தவொரு பொறுப்பும் வாடிக்கையாளரின் வேறு ஏதேனும் கணக்குடன் ஒருங்கிணைக்கப்பட்டோ அல்லது ஒன்றாக சேர்க்கப்பட்டோ NBIP திட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள எந்தத் தொகையையும் வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ள, வேறு ஏதேனும் தொகையை வேறு ஏதேனும் ஒரு கணக்கிற்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு வழியில், அத்தகைய பொறுப்புக்கள் உண்மையானதாகவோ அல்லது நிச்சயமற்றதாகவோ, முதன்மையானதாகவோ அல்லது பிணையாகவோ மற்றும் பலதோ அல்லது கூட்டாகவோ அல்லது ஒன்றிணைக்கப்பட்டதாகவோ இருந்தாலும் கூட, சாட்டுவதற்கு அல்லது பரிமாற்றம் செய்வதற்கு வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புதல் அளித்து அதற்காக வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

34. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் அதன் விருப்பப்படி மாற்ற, திருத்த அல்லது சேர்க்க வங்கிக்கு உரிமை உள்ளதுடன், வாடிக்கையாளர் அத்தகைய மாற்றம், திருத்தம் அல்லது சேர்த்தலுக்குக் கட்டுப்படுவார். அத்தகைய மாற்றங்கள், திருத்தங்கள் மற்றும்/அல்லது சேர்த்தல்கள் பற்றிய அறிவிப்புகள் வாடிக்கையாளருக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படலாம் மற்றும்/அல்லது உள்ளூர் செய்தித்தாள்களில் வெளியிடப்படலாம் மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளின் அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்படலாம் மற்றும்/அல்லது பிரசுர செய்திகள் மூலம் அனுப்பப்படலாம். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் எந்த அறிவிப்பும் வாடிக்கையாளரின் அவரது கடைசியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற முகவரிக்கு அனுப்பிய ஏழு (7) நாட்களுக்குள் வாடிக்கையாளருக்கு அது கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கருதப்படும். அவ்வாறு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் எந்த அறிவிப்பும் போதியளவில் மற்றும்

முறையாக விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பாகக் கொள்ளப்படும் என்பதுடன், வாடிக்கையாளர்அதற்குக்க கட்டுப்பட வேண்டும்.

35. சட்டத்தின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியமாக்கப்பட்டிருந்தால், இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தானாகவே திருத்தப்படும்.

36. ஒரு நிறுவனத்தின் சார்பாக அல்லது, ஒரு வியாபார நிறுவனத்தில் பங்குதாரர்களாலோ அல்லது வேறுவிதமாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களாலோ இந்த ஆவணத்தில் கையொப்பமிட்டிருந்தால், இதில் அடங்கியுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அத்தகைய ஒவ்வொரு நபராலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் கொடுக்கப்படுவதாக அல்லது ஏற்றுக் கொள்ளப்படுவதாகக் கருதப்படும்.

37. அ) இந்த ஆவணம் ஒரு தனிப்பட்ட தொழில்முயற்சியாளரால் கையொப்பமிடப்பட்டிருந்தால், அந்தத் தனிநபர் தனது வியாபார நிறுவனத்தில் ஏற்படக்கூடிய ஏதேனும் மாற்றங்கள் குறித்து வங்கிக்கு அறிவிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்.

ஆ) இந்த ஆவணத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் வியாபார நிறுவனத்தின் பங்குதாரர்களாக கையொப்பமிட்டிருந்தால், அத்தகைய ஒவ்வொரு நபரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பின்வருமாறு பிரகடனம் செய்து பொறுப்பேற்கிறார்கள்:

i) அத்தகைய ஒவ்வொரு நபருக்கும் கம்பனியின் சார்பாக கட்டுப்பட்டிருக்கவும் மற்றும் அது சார்பாகக் கையொப்பமிடவும் அதிகாரம் உள்ளது என்பதுடன், அத்தகைய நபர்களால் கம்பனியின் சார்பாக கட்டுப்பட்டிருக்கவும் மற்றும் அது சார்பாகக் கையொப்பமிடவும் வேறு யாரேனும் ஒரு நபருக்கு அதிகாரம் அளிப்பதாக எழுத்துப்பூர்வமாக அறிவிப்பதாயின், அத்தகைய நபர்களில் எவரேனும் ஒருவரிடமிருந்து அதற்கு எதிராக ஓர் அறிவிப்பு வரும் வரை அத்தகைய அதிகாரத்தின் மீது செயல்பட வங்கியால் முடியும்.

ii) எந்தவொரு பங்காளியும் மரணித்தால் அல்லது ஓய்வு பெற்றால், உயிருடனிருக்கும்/தொடர்ந்து கடமையில் இருக்கும் பங்காளி(கள்) அத்தகைய மரணம் அல்லது ஓய்வுபெறுதல் (ஏற்புடையதாகின்றவாறு) பற்றி வங்கிக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பை அளிக்க வேண்டும் என்பதுடன், வங்கிக்கு அத்தகைய அறிவிப்பு வழங்கப்படும் வரை அல்லது மரணித்த பங்காளியின் வாரிசுகளால் அல்லது சட்டப்பூர்வ பிரதிநிதிகளால் (ஏற்புடையதாகின்றவாறு) வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கும் வரை உயிருடனிருக்கும்/தொடர்ந்து கடமையில் இருக்கும் பங்காளிகளுக்கு (ஏற்புடையதாகின்றவாறு) வியாபார நிறுவனத்தின் வியாபாரத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் அதன் ஆதனங்கள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கும் பூரண அதிகாரம் உள்ளதனால், வியாபார நிறுவனத்தில் எந்த மாற்றமும் ஏற்படாததைப் போன்று கருதுவதற்கு வங்கிக்கு உரிமையுண்டு.

Iii) எந்தவொரு பங்குதாரரும் மற்ற பங்குதாரரின் (அடுத்த பங்குதாரரின் ) அதிகாரம்

நிறுத்தப்பட்டதாக வங்கிக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பை வழங்கினால், வங்கி இங்குள்ள விதிமுறைகளின்படி அல்லது வேறுவிதமாக திறக்கப்பட்ட கணக்குகளை இயக்குவதற்கான அதிகாரத்தை வங்கி மறுக்கலாம், மற்றும்

iv) வியாபார நிறுவனத்தில் புதிதாக சேர்க்கப்படும் பங்காளிகளின் விவரங்களை எழுத்துப்பூர்வமாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

38. இங்கு அடங்கியுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, வங்கியில் ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு மற்றும்/அல்லது மேலதிகப்பற்று வசதியப் பெற்றுக் கொள்ள முன், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்படுகின்ற வங்கியின் பொதுவான வியாபார நிபந்தனைகளில் இணைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் NBIP கணக்கு, நடைமுறைக் கணக்கு மற்றும் மேலதிகப்பற்று வசதி உட்படும் என்பதுடன், அதற்குக் கட்டுப்படவும் செய்யும். அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பொதுவான வியாபார நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், இங்கு உள்ள அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வாடிக்கையாளர் முழுமையாகவும் சமமாகவும் கட்டுப்படுவார்.

39. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களால் நிர்வகிக்கப்படும்.

40. இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் நான் / நாங்கள் நன்கு வாசித்துப் புரிந்து கொண்டேன்/டோம் என்பதையும், அதற்குக் கட்டுப்பட்டு நடப்பேன்/போம் என்பதற்கும் இத்தால் இணங்குகிறேன் /றோம்.

**ஏக உரிமை வியாபாரம்/கூட்டு வியாபாரத்தின் / சங்கத்தின் / அமைப்பின் / இயக்கத்தின் / கம்பனியின் பெயர்:**
**(தேவையற்ற சொற்களை நீக்கி விடவும்)**

கையொப்பம் : ..............................................................................

பெயர் : ..............................................................................

பதவி (ஏற்புடையதாயின்) : ..............................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................

திகதி : ..............................................................................

கையொப்பம் : ..............................................................................

பெயர் : ..............................................................................

பதவி (ஏற்புடையதாயின்) : ..............................................................................

NationsTrustBank

தேசிய அடையாள அட்டை இலக்கம் : .......................................................

திகதி : ......................................................................................

கைையொப்பம் : .........................................................................................

பெயர் : .........................................................................................

பதவி (ஏற்புடையதாயின்) : .........................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் : .......................................................

திகதி : .........................................................................................

கைையொப்பம் : .........................................................................................

பெயர் : .........................................................................................

பதவி (ஏற்புடையதாயின்) : .........................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் : .......................................................

திகதி : .........................................................................................